**Dated : 23.10.2025**

**O.S.No. 475/2022**

**PW.2 – திரு. சேகர்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் 8ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். சென்னகேசவன் எனக்கு உறவினர் தான். பிரதிவாதி ராமமூர்த்தி, விஜயலட்சுமி ஆகியோரும் எனக்கு உறவினர் தான். முதல் பிரதிவாதி வீடு கட்டிக்கொண்டிருக்கிறார், அவர் கிரானைட் தொழில் செய்கிறார். ராமமூர்த்தியும், விஜயலட்சுமியும் சென்னகேசவனிடம் பணம் கேட்ட விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் டீ கடையில் நின்றிருந்த போது, ராமமூர்த்தி என்னை அழைத்து சாட்சி கையொப்பம் போடும் படி கேட்டார். சாட்சி கையெழுத்து போடும் நாளில் தான் எனக்கு சென்னகேசவனிடம் பிரதிவாதிகள் கடன் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் என் முன்னிலையில் தான் கடன் வாங்கினார்கள். பாண்டு எழுதிக்கொடுப்பதற்கு முன்னதாகவே கடன் கேட்டார்களா, அதற்கு முன்னதாகவே பணம் கேட்டார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. ஒரே பாண்டில் ரூ.20,00,000/– என்று எழுதிக்கொள்ளாமல் ஏன் தனித்தனியாக நான்கு பாண்டுகளில் ரூ.5,00,000/–, ரூ.5,00,000/– என எழுதிக்கொண்டார்கள் என்றால் அவ்வப்போது கொடுப்பதற்கு வசதியாக அவ்வாறு எழுதிக்கொண்டார்கள்.

அவ்வப்போது கொடுக்கிறேன் என்று யார் சொன்னது என்றால் 1ம் பிரதிவாதி ராமமூர்த்தி அவ்வாறு கூறினார். ராமமூர்த்தி மற்றும் விஜயலட்சுமி பாண்டில் கையெழுத்து போடும் அன்றே பாண்டின் பின்புறமும் கையெழுத்து போட்டார்களா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 4 பாண்டுகளிலும் உள்ளது ஒரே மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படும் கையெழுத்துக்களில் உள்ள Ink (இங்க்கும்), முன்புறம் எழுதப்பட்டிருக்கும் Ink (இங்க்கும்) ஒன்று போல் தான் காணப்படுகிறது என்றால் எனக்கு தெரியவில்லை. பாண்டில் நான் கையொப்பமிட்டதற்கான அந்த தேதியை குறித்து வைத்துள்ளேனா என்றால் இல்லை. 15.01.2017 என்று உள்ள தேதியை நான் குறித்து வைத்திருந்தேனா என்றால் எனக்கு மனப்பாடமாக தெரியும். நான் ஜவுளி கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் வாதியின் கடையில் தான் வேலை பார்க்கிறேன். நான் வாதியின் கடையில் வேலை பார்ப்பதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் என்னிடம் யாரும் அதுபற்றி கேட்கவில்லை, அதனால் நான் சொல்லவில்லை.

சொன்னகேசவன் வேறு யாருக்கேனும் பாண்டின் பேரில் பணம் கொடுத்திருக்கிறாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சென்னகேசவன் கடையில் நான் வேலை செய்யும் பட்சத்தில் பிரதிவாதிகள் சென்னகேசவன் வீட்டிற்கு என்னை அழைத்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் அவர்கள் கூட்டி சென்றார்கள், அப்போது நேரம் காலை 9.00 மணியிருக்கும். பாண்டு எழுதியவர் சென்னகேசவன் வீட்டிற்கு வந்தாரா என்றால் வந்தார், எங்கிருந்து வந்தார் என்று தெரியவில்லை. அவரை யார் அழைத்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சாட்சி கையொப்பமிட்ட பாண்டினை ஏற்கனவே எழுதிவைத்திருந்தார்கள் என்றால் சரிதான். என் முன்னிலையில் ராமமூர்த்தி மற்றும் விஜயலட்சுமி ஆகியோர் கையொப்பமிடவில்லை என்றால் என் முன்னிலையில் தான் கையொப்பமிட்டார்கள். முதல் பக்கத்தில் போட்ட கையொப்பத்தை போலவே பின்பக்கத்தில் போடப்பட்ட கையெழுத்தையும் நான் பார்த்தேன் என்றால் நான் பின்பக்க கையெழுத்தை பார்க்கவில்லை. சென்னகேசவன் ஏற்கனவே பாண்டுகளை பூர்த்தி செய்து வைத்திருந்த பாண்டுகளில் தான், நானும் சாட்சி கையொப்பமிட்டிருக்கிறேன் என்று சொன்னால் ராமமூர்த்தி கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பமிட்டேன். வாதி என்னுடைய முதலாளி என்ற விசுவாசத்தில் நான் கையொப்பமிட்டு, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.